

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை – பல்லாவரத்தில் நடைபெற்ற – கழக முன்னோடி என்.ஆனந்தன் மகன் ஏ. திருமலை (எ) திலீப் – எம். வித்யா ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இதில் திருமதி. துர்கா ஸ்டாலின், காஞ்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன், முன்னாள் எம்.எல்.ஏ., இ.கருணாநிதி மற்றும் மணமக்களின் உறவினர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (20.6.2026) அரும்பாக்கத்தில் நடைபெற்ற சென்னை மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் எம்.ஜீவானந்தம் – பிருந்தா இணையரின் மகன் ஜெ.ரூபேஷ் – வி.சரண்யா ஆகியோரின் மண விழா வரவேற்பில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள், தொழிலதிபர் நல்லிகுப்புசாமி, புகைப்பட நிபுணர் யோகா, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, ந.இராமலிங்கம், ச.பரமசிவம் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

## பெரம்பூர் தொகுதியில்

# விஜய் வெற்றியை எதிர்த்து வழக்கு!

## கழக வேட்பாளர் ஆர்.டி.சேகர் தொடர்ந்தார்!



சென்னை, ஜூன் 21

பெரம்பூர் தொகுதியில் முதல்வர் விஜய் வெற்றியை எதிர்த்து கழக வேட்பாளர் ஆர்.டி.சேகர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

பெரம்பூர் தொகுதியில் த.வெ.க. தலைவர் விஜய், தி.மு.க. வேட்பாளர் ஆர்.டி.சேகர் உள்ளிட்ட பல்வேறு கட்சி வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

இத்தொகுதியில் முதல்வர் விஜய் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்த தொகுதியில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக கூறி, முதல்வர் விஜயின் வெற்றியை எதிர்த்து கழக வேட்பாளர் ஆர்.டி.சேகர், வாக்காளர்கள் தினேஷ், லட்சுமி நரசிம்மன் ஆகியோர் வழக்கு தொடர்ந்துள்ளனர்.

## ‘நான் முதல்வன்’ திட்டத்தை முடக்குவது

# தமிழ்நாட்டு இளைஞர்களின் வளர்ச்சியை முடக்கும் செயல்!

## த.வெ.க. அரசுக்கு – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, ஜூன் 21–

**நீங்கள் ‘நான் முதல்வன்’ திட்டத்தின் பெயரை மாற்றலாம். ஆனால் அத்திட்டத்தின் சாதனைகளையும் நன்றியுணர்வையும் மக்கள் மனங்களில் இருந்து நீக்க முடியாது. இத்திட்டத்தை முடக்குவது தமிழ்நாட்டு இளைஞர்களின் வளர்ச்சியை முடக்கும் செயல் என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளதாவது:–

நீங்கள் ‘நான் முதல்வன்’ Social Media பக்கங்களின் பெயரை மாற்றலாம். அதில் இருந்த பதிவுகளை delete செய்யலாம்.




ஆனால், இதுபோல ஆயிரம் ஜெனிபர்களின் கனவை நனவாக்கிய ‘நான் முதல்வன்’



திட்டத்தின் சாதனைகளையும் நன்றியுணர்வையும் மக்கள் மனங்களில் இருந்து Delete செய்யவே முடியாது. அவை அவர்களின் இதயத்தில் ஆழமாக Archive செய்யப்பட்டுவிட்டன.

கடந்த 5 ஆண்டுகளாக, எனது ஆட்சிக்காலத்தில் “படிங்க, படிங்க, படிங்க” என்று தொடர்ந்து சொல்லி வந்தேன். அப்படி படித்து முன்னேற விரும்பும் இளைஞர்களுக்கு உதவத்தான் ‘நான் முதல்வன்’ எனும் என் கனவுத் திட்டத்தைத் தொடங்கினேன். அதனை முடக்குவது தமிழ்நாட்டு இளைஞர்களின் வளர்ச்சியை முடக்கும் செயலாக அமைந்து விடும்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

